பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 13 வியாழக்கிழமை 29.07.2021 கதிர் 132

## கொரோனாச் சட்டத்தை மீறிய 122 பேர் சிக்கினர்

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 122 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

☞2

# வட்டுவாகல் கடற்படை முகாமுக்கு முன் அணிதிரண்ட மக்களால் மிரண்டது அரசு

### காணி அளவீடு இடைநிறுத்தம்; போராட்டமும் தற்காலிகமாக முடிவுக்கு







**முல்லைத்தீவு, வட்டுவாகலில் கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்னால் மக்கள் இன்று முன்னெடுத்த எதிர்ப்புப் போராட்டம் பல மணி நேரங்களின் பின்னர் வாக்குறுதிகளுடன் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது. அதேவேளை, காணி அளவீடும் இடைநிறுத்தப்பட்டது.**

☞2

## ஒருதலைக் காதல் விடயம் கத்தி வெட்டில் முடிந்தது



ஒருதலைக் காதல் விவகாரத்தால் சக பெண் உத்தியோகஸ்தரைக் கத்தியால் குத்திய நபர், தானும் தன்னைத் தானே கத்தியால் குத்தி தற்கொலைக்கும் முயன்றுள்ளார்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழில் உள்ள அரச திணைக்களம் ஒன்றில் நேற்று நடைபெற்ற

☞2

## பிரதேச செயலக உத்தியோகத்தர் கொரோனாத் தொற்றால் மரணம்

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் முதலாவதாகத் தொற்றுக்குள்ளான திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர் இன்று நண்பகல் உயிரிழந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த 43 வயதான ராசா ரமேஸ்குமாரன் என்பவரே இவ்வாறு கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் குறித்த உத்தியோகத்தருக்குத் தொற்று

☞2

## தனிமைப்படுத்தப்பட்டார் அமைச்சர் விமல் வீரவன்ஸ



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ, அவரது வீட்டில் இன்று முதல் 14 நாள்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

அவரது பாதுகாப்புப் பிரிவில் சிலருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்தே

☞2

## ஷிரந்தியின் உதவியால் பார்வை பெற்ற சிறுவன்

### மஹிந்தவை நேரில் சந்தித்தார்



பிறப்பிலேயே பார்வையை இழந்த நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவின் தலையீட்டினால் பார்வை பெற்ற கலென்பெந்துனுவெவ, பலுகொல்லாகம ஜீவந்த ரத்நாயக்க என்ற சிறுவன் அலரிமாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

13 வயதான ஜீவந்த ரத்நாயக்க தனக்கு பார்வை வேண்டி சமூக வலைத்தளங்களில் எழுப்பிய குரல் ரோஹித ராஜபக்ஷ ஊடாக ஷிரந்தி ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து முதலில் சிறுவனைக் கொழும்புக்கு

☞2

## ரிஷாத் எம்.பியின் வீட்டில் பணிபுரிந்த 10 பெண்களில் 5 பேரிடம் வாக்குமூலம்



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பணியாற்றிய 10 பெண்களில் ஐவரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த நிலையில் உயிரிழந்த 16 வயது சிறுமியான ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு

☞2

## தொற்றாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் விபத்து; இரு பெண்கள் பலி

பொலன்னறுவை, மன்னம்பிட்டி பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தொன்றில் இரு பெண்கள் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

இராணுவ பஸ்ஸொன்று ஜீப் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இறந்தவர்கள் ஒரு துப்புரவு நிறுவனத்தின் ஊழியர்கள் ஆவார்.

பொலன்னறுவையிலிருந்து மன்னம்பிட்டிய தனிமைப்படுத்தல் நிலையத்துக்குக் கொரோனாப் பாதிப்புக்குள்ளானவர்களை ஏற்றிச் சென்ற இராணுவ பஸ்ஸும்,

☞2

### சுன்னாகம் தோட்டக் கிணற்றில் இருந்து

## உருக்குலைந்த நிலையில் இளைஞரின் சடலம் மீட்பு!

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குட்டிப்புலம் பகுதியில் உள்ள தோட்டக் கிணற்றில் இருந்து உருக்குலைந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மேற்கு, ஊரெழுவைச் சேர்ந்த இராசதுரை சுதாகரன் (வயது 36) எனும் இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த தோட்டக் கிணற்றில் சடலம் காணப்படுகின்றதுஎனச் சுன்னாகம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதால் சில தினங்களுக்கு முன்னரே இவர் உயிரிழந்திருக்கலாம்

☞2

## மூன்றே நாள்களான சிசுவும் கொரோனாத் தொற்றால் சாவு

பிறந்து மூன்றே நாள்களான சிசு ஒன்று, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளது.

களுத்துறை – வெலிபென்ன, பெலிவத்தகந்த பிரதேசத்தைச் சேர்ந்த சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த சிசுவானது, பெற்றோருக்குப் பிறந்த முதல் குழந்தை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

நாகொடை வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றதன் பின் வீடு திரும்பிய நிலையில் குழந்தை இவ்வாறு உயிரிழந்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## ரிஷாத் எம்.பியின் வீட்டில் பணிபுரிந்த ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன.

சிறுமி எவ்வாறு உயிரிழந்தார், சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை, கொடுமைப்படுத்தப்பட்டமை, முறையாகக் கவனிக்கப்படாமை போன்ற குற்றங்களின் கீழ் விசாரைண மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியவர் யார், அவர் குழுவொன்றினால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுமியின் சடலத்தை மீண்டும் தோண்டியெடுத்து இரண்டவாது தடவை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக மூவரடங்கிய விசேட நீதிமன்ற வைத்தியர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினரின் முன்னிலையில் நாளை சிறுமியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு மீண்டும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இன்று விசாரணை அதிகாரிகளின் மூலமாக நுவரெலியா நீதிமன்றத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக நுவரெலியா நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் சிறுமியின் சடலம் தோண்டி எடுக்கப்படவுள்ளது.

சிறுமியின் சடலம் புதைக்கப்பட்டுள்ள பொதுமயானத்துக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரிஷாத் எம்.பியின் வீட்டில் 2010ஆம் ஆண்டிலிருந்து இதுவரை குறித்த சிறுமி உட்பட 10 பெண்கள் பணியாற்றியுள்ளமை தெரியவந்துள்ளது. அவர்களில் ஐந்து பெண்களிடம் இதுவரை விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சில பெண்கள் அவர்களது பிரதேசங்களிலிருந்து வெளியேறிச் சென்றுள்ள நிலையில் அவர்களது பெற்றோரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

## உருக்குலைந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஒருதலைக் காதல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

திணைக்களத்தில் பணியாற்றி வரும் ஆண் உத்தியோகஸ்தர், அங்கு கடமை புரியும் சக பெண் உத்தியோகஸ்தர் ஒருவரை ஒரு தலையாகக் காதலித்து வந்துள்ளார். அவரின் காதலைப் பெண் உத்தியோகஸ்தர் ஏற்க மறுத்து வந்த நிலையில், அவர் அப்பெண்ணுக்குத் தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

தொந்தரவு தாங்க முடியாத அப்பெண் ஒரு கட்டத்தில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஆண் உத்தியோகஸ்தரை அழைத்து கடுமையாக எச்சரித்து அனுப்பிவைத்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று அலுவலகத்தில் இருவரும் கடமையில் இருந்துள்ளனர். திடீரென ஆண் உத்தியோகஸ்தர், பெண் உத்தியோகஸ்தர் மீது சரமாரியாகக் கத்தியால் வெட்டி விட்டு, அலுவலக மலசல கூடத்துக்குள் சென்று தாழிட்டுள்ளார்.

சம்பவத்தை அடுத்து இரத்த வெள்ளத்தில் கிடந்த பெண் உத்தியோகஸ்தரை, அங்கு கடமையில் இருந்த சக உத்தியோகஸ்தர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

அதேவேளை, அப்பகுதியால் சிவில் உடையில் சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பில் அறிந்து அலுவலகத்துக்குள் சென்றபோது, கத்தியால் வெட்டிய நபர் மலசலகூடத்துக்குள் தாழிட்டு இருப்பதை அறிந்து, அவரை வெளியே வருமாறு அழைத்துள்ளனர்.

எந்தச் சத்தமும் இல்லாத நிலையில் கதவை உடைத்துத் திறந்தபோது, அந்நபர் தன்னைத் தானே கத்தியால் குத்திக் கொண்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

அவரை அங்கிருந்து மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதேவேளை, கத்தியால் குத்திய நபரின் அலுவலக மேசை லாச்சியினுள் வேறொரு கத்தியும், மற்றுமொரு கூரிய ஆயுதமும் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## தொற்றாளர்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலன்னறுவை வைத்தியசாலைக்கு தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற சிறிய ஜீப் ஒன்றுமே விபத்தில் சிக்கியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மூன்று பெண்களின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது எனவும், விபத்து நடந்த நேரத்தில் ஜீப்பில் 13 பேர் பயணம் செய்தனர் எனவும் பொலிஸார் கூறுகின்றனர்.

## தனிமைப்படுத். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, விமல் வீரவன்ஸ வகிக்கும் கைத்தொழில் அமைச்சு அமைந்துள்ள கட்டடமும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மூடப்பட்டுள்ளது.

கொழும்பு - காலி முகத்திடல் வீதியின் சினமன் கிராண்ட் ஹோட்டலுக்கு அருகே இந்த அமைச்சுக் கட்டடம் உள்ளது.

## பிரதேச செயலக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவருக்கு மூச்சு விடுவதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு கொரோனாத் தொற்றாளர்களின் விடுதியின் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வந்தார். இந்தநிலையில், இன்று அவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் மேலும் 8 உத்தியோகத்தர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மேலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டவர்களுக்குத் தொற்று இல்லை என நேற்றுமுன்தினம் இரவு வெளியாகிய பரிசோதனை முடிவுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## ஷிரந்தியின் உதவியால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்து நாட்டின் சிறந்த மற்றும் புகழ் பெற்ற கண் மருத்துவரிடம் அவரை சிகிச்சைக்காக அனுமதித்து, அச்சிறுவனுக்கு பல பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அப்பரிசோதனைகளுக்கமைய கண் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளாது அச்சிறுவனின் ஒரு கண்ணில் பார்வை பெற முடியும் என்ற விசேட வைத்திய நிபுணரின் பரிந்துரைக்கமைய சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது.

சிகிச்சையின் பெறுபேறாக அச்சிறுவனுக்கு பார்வை தெரிய ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், பிரதமரைச் சந்திப்பதற்காக வருகைதந்த சிறுவனின் தந்தை சுகதபால கருத்துத் தெரிவிக்கையில்,

எனது மகனுக்குப் பிறப்பிலேயே பார்வை இல்லை. அதனால் எனது மகன் மிகுந்த இன்னல்களுக்கு முகங்கொடுத்தார்.

எமது மகனின் கண் பார்வைக்காகச் சிகிச்சை அளிக்கும் அளவுக்கு எம்மிடம் வசதி இல்லை.

இவ்வாறான நிலையிலேயே ஷிரந்தி ராஜபக்ஷ எனது மகனுக்கு சிகிச்சை அளிக்க உதவுவதற்கு முன்வந்தார்.

அவர் கொழும்பில் விசேட கண் வைத்திய நிபுணர் ஒருவரிடம் எனது மகனைச் சிகிச்சைக்கு அனுமதித்தார். கூறுவதற்கே மகிழ்ச்சியாக உள்ளது.

தற்போது எனது மகனுக்குப் பார்வை கிடைத்துவிட்டது. சைக்கிள் ஓடுகின்றார்; புத்தகங்களை வாசிக்கின்றார். அவர் தனது வேலைகளைத் தானே செய்து கொள்கின்றார்.

எனது மகன் அனுராதபுரம் ரியன்சி அழகியவன்ன விசேட பாடசாலையில் கல்வி பயில்கின்றார். இது மிகவும் உன்னதமான புண்ணிய காரியமாகும் - என்றார்.

சிறுவன் பிரதமரைச் சந்தித்தபோது பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் உடனிருந்தார்.

## கொரோனாச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 52 ஆயிரத்து 513 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வட்டுவாகல் கடற்படை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக காணி சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் இன்று காலை பிரசன்னமாகியிருந்த நிலையில் காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், எஸ்.வினோநோதராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் எனப் பெருமளவானோர் அங்கு கூடினர்.

நில அளவைத் திணைக்கள வாகனம் அங்கு வந்தபோது மக்கள் வாகனத்தைச் சூழ்ந்து கொண்டு எதிர்ப்பை வெளியிட்டனர்.

சம்பவத்தை அடுத்து அதில் வந்த அதிகாரி கடற்படை வளாகத்துக்குத் தனியாக நுழைந்தார்.

அதன் பின்னர் சிறிய ஒலிபெருக்கி மூலம் காணி அளவீட்டுக்கு மக்களை ஒத்துழைக்குமாறு சமரச முயற்சியில் ஈடுபட்டார்.

இதையடுத்து அவரை வெளியே வருமாறு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனிடையே மக்களுடனும் அரசியல் பிரமுகர்களுடனும் பொலிஸார் சமரச முயற்சியில் ஈடுபட்டபோதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

சம்பவத்தை அடுத்து அங்கு வந்த முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் காணி அளவீடு இடம்பெறவில்லை என்றும், மாவட்ட செயலர் கொழும்பில் உள்ளமையால் அவர் முல்லைத்தீவு திரும்பியதும் எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதிக்குள் கலந்துரையாடலை மேற்கொண்டு காணி அளவீடு தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும், மக்களை கலைந்து செல்லுமாறும் கோரினார்.

இதனிடையே நில அளவைத் திணைக்களத்துக்குச் சொந்தமானதாகக் கருதப்படும் மற்றொரு வாகனம் இன்னொரு வாசல் வழியாக கடற்படை முகாமுக்குள் சென்றது.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் உள்ளே காணி அளவீடு நடைபெறுகின்றதா? எனக் கேள்வி எழுப்பி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அவ்வாறு நடைபெறவில்லை என்று பொலிஸாரும் மாவட்ட மேலதிக அரச அதிபரும் தெரிவித்தபோதிலும் அதனை ஏற்க முடியாது என்று தெரிவித்த மக்கள், நில அளவைத் திணைக்களத்திலிருந்து உள்ளே சென்ற அதிகாரி நேரில் வந்து நடைபெறவில்லை என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கோரினர்.

இதனிடையே, உள்ளே சென்ற நில அளவைத் திணைக்கள வாகனத்தில் ஏறிய குறித்த அதிகாரி, வாசல் ஊடாக வெளியேற முற்பட்டபோது அவரைப் புதுக்குடியிருப்பு திசையில் பயணித்து முல்லைத்தீவை அடையுமாறு பொலிஸார் ஏற்பாடு செய்தனர்.

சம்பவத்தை அடுத்து அந்த வாகனத்தைச் சூழ்ந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பொலிஸார் குறித்த எதிர்ப்பாளர்களை தள்ளியதால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இருந்தபோதிலும் குறித்த வாகனம் அங்கிருந்து சென்றுவிட்டது.

சம்பவத்தை அடுத்து ஏ - 35 வீதியில் அமர்ந்து மக்களும் அரசியல் பிரமுகர்களும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

மூன்று மணி நேரம் தொடர்ந்த போராட்டத்தை அடுத்து முல்லைத்தீவு நில அளவைத் திணைக்கள அதிகாரியும், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபரும் வந்து காணி அளவீடு எதுவும் இன்று நடைபெறவில்லை என்றும், எதிர்வரும் வாரம் அது குறித்த கலந்துரையாடல் நடைபெற்று அதன் பின்னரேயே இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்த நிலையில் மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

ஏற்கனவே மூன்று தடவைகள் இவ்வாறான காணி அளவீட்டு முயற்சிகள் மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தமிழரின் துரதிர்ஷ்டம்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த மூன்று தசாப்த காலம் அதன் செல்நெறியைத் தீர்மானிக்கும் காத்திரமான விடயமாக அமைந்தது இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஆகும்.

அது கைச்சாத்தாகி இன்றுடன் சரியாக 34 வருடங்கள் பூர்த்தியாகுகின்றன.

இந்த ஒப்பந்தம் திடுதிப்பென வந்த ஒன்றல்ல.

சுமார் ஆறு, ஏழு ஆண்டுகள் இலங்கை – இந்திய இராஜதந்திரிகள் இடையே இடம்பெற்ற பெரும் இழுபறி இராஜதந்திர முரண்பாடுகள், நெருக்கடிகள், குளறுபடிகளின் பிறப்பாக்கமே அது.

1983 ஜூலையில் பெரும் ஊழித் தீயாய் தென்னிலங்கையில் பற்றியெரிந்த கறுப்பு ஜூலைக் கலவரம்தான் இலங்கையில் இந்திய அரசு தலையீடு செய்வதற்கான போதிய இடைவெளியையும் பொருத்தமான புற நிலையையும், தகுந்த நியாயத்தையும் உருவாக்கிக் கொடுத்தது என்று கூறுவது தவறல்ல.

ஏதிலிகளாக, அநாதைகளாக நின்ற அப்பாவி தமிழ் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவழிப்பு வன்முறைக் கொடூரத்தில் இருந்து அந்த இனத்தைப் பாதுகாத்து காப்பாற்றுவதற்கான மனிதாபிமான தலையீடாக இந்த நடவடிக்கைகள் கட்டவிழ்ந்தன.

இந்த அரசியல் இராஜதந்திர முயற்சி இந்தியாவைத் தன்னளவில் ஒரு மத்தியஸ்த நிலைக்கு உயர்த்தி, இந்திய – இலங்கை உடன்படிக்கையாக முடிந்தது.

இந்த உடன்படிக்கையை எட்டுவதற்கான இராஜதந்திர எத்தனங்களே பல நெளிவு சுளிவுகளையும், பிற தரப்புக்குப் பொறி வைக்கும் வேலைகளாகவும், கால் வாரும் நடவடிக்கைகளாகவும் கூட நகர்ந்தமை மறக்கக் கூடியதல்ல.

தமிழர் தேசத்தை ஆக்கிரமித்துச் சிதைத்தழிக்கும் தீய எண்ணம் கொண்ட சிங்கள அரசுக்கு எதிராக தமிழரின் ஆயுதப் போராட்ட இயக்கங்களைக் கட்டியெழுப்பும் இந்தியாவின் இரகசிய உதவித் திட்டத்தையும் கூட இந்த நகர்வுக்கான முன்னெடுப்பு ஓர் அங்கமாக கொண்டிருந்தது.

பல்வேறு பரிமாணங்களையும், நோக்கங்களையும், இலக்குகளையும் கொண்டதாகப் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்தியாவின் இந்தத் தலையீடு இறுதியில் இன்றுவரை இந்திதிய வெளிவிவகாரக் கொள்கைக்கும் இராஜதந்திர முயற்சிகளுக்கும் பெரும் பின்னடைவாகவே நீடிக்கின்றது என்பதும் மறுக்க, மறக்க, மறைக்கக் கூடியது அல்ல.

இந்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கான சுமார் நான்கு ஆண்டு காலப் பயணம் என்பது இலங்கைத் தமிழர் தரப்புடன் இந்தியா சம்பந்தப்பட்டு, இலங்கையையும் ஈடுபடுத்தி, முன்னெடுத்த திம்பு பேச்சு, பெங்களூர் பேச்சு என பல பிரதான ஊடாட்டங்களைக் கொண்டு அமைந்தது.

திம்புப் பேச்சின் போது தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைந்து தமது பிரதான அபிலாஷைகள் என மூன்று விடயங்களை முன்வைத்தன்.

ஒன்று – தமிழர்கள் தனியான ஒரு தேசிய இனம் என்பதை அங்கீகரிக்க வேண்டும்.

இரண்டு – இலங்கையின் வடக்கும், கிழக்கும் அந்த மக்களின் பூர்வீகத் தாயகம் என்பது ஏற்று அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மூன்றாவது – அத்தகைய தமிழ்த் தேசிய இனத்திற்கு அவர்களின் பூர்வீக தாயகத்தில் தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் வகையிலான சுயநிர்ணய உரிமை உண்டு என்பது ஏற்கப்பட வேண்டும்.

1985 நடுப் பகுதியில் நடைபெற்ற திம்பு பேச்சுக்களின் போது இந்த மூன்று அடிப்படை கோட்பாடுகளையும் கொழும்பு ஏற்க மறுத்து அடியோடு நிராகரித்தது.

எனினும் 1987 ஜூலை 29 இல் கைச்சாத்தான இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மேற்படி மூன்று கோரிக்கைகளில் முதல் இரண்டையும் ஏற்று ஒப்பமிட்டது இலங்கை.

தமிழர்கள் தனியான தேசிய இனம் என்பதும் வடக்கும், கிழக்கும் அவர்களின் பூர்வீகத் தாயகம் என்பதும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் முன்னுரையிலேயே ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது விடயமான தமிழினத்தின் சுயநிர்ணய உரிமை என்ற அம்சத்தை பின்னர் 15 ஆண்டுகள் கழித்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நோர்வேயின் அனுசரணையில் நடந்த பேச்சுக்களின் போது இணங்கி ஒஸ்லோ அறிக்கையை விடுத்ததன் மூலம் கொழும்பு ஒப்புக்கொண்டது.

இப்போது ஆயுத ரீதியில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை – உரிமைக் கிளர்ச்சியை – அடக்கி விட்ட திமிர் காரணமாக பௌத்த சிங்கள அரசு தான் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட மூன்று அடிப்படைகளையுமே நிராகரித்து நிற்கின்றது.

இந்த நிராகரிப்பில் முதல் இரண்டு விடயங்களும் – இலங்கை தமிழர்கள் இந்தத் தீவின் தனியான தேசிய இனம், வடக்கும் கிழக்கும் அவர்களின் பூர்வீகத் தாயகம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளும் – அடங்குகின்றன.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையை எழுத்தில் இணங்க வைத்த இந்தியாவினால் கூட அதனை நிலை நிறுத்தச் செய்ய முடியாமல் இருப்பதுதான் இந்த மூன்றரை தசாப்த காலத்தில் தமிழரின் பெரும் துரதிர்ஷ்டம் ஆகும்.

# உயர் கல்வியின் நோக்கத்தை சிதைக்காதீர்கள்

## வவுனியா பல்கலை ஆசிரியர் சங்கம் போராட்டம்

கொத்தலாவல இராணுவ பல்கலைக்கழக சட்ட மூலத்திற்கு எதிராக வவுனியாவிலும் நேற்று (புதன் கிழமை) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பல்கலைக் கழகம் அமைந்துள்ள பம்பைமடுப்பகுதியில்வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

பல்கலைக்கழகங்களை தனியார்மயப்படுத்தி இராணுவ மயப்படுத்துவதையும் எதிர்த்துஇந்தபோராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.இந்த சட்டமூலத்துக்கு எதி ரான செயற்பாடுகளுக்கு தாம் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவோம் எனவும்அவர்கள்குறிப்பிட்டனர்.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொத்தலாவல சட்டமூலத்தை முறியடிக்க ஒன்றிணைவோம், ஒழுக்கமென்பது கேள்விகேட்காத கீழ்படிவல்ல, கொத்தலாவல இராணுவத்துக்கு? அரச பல்கலைக்கழகம் பொதுமக்கள் கல்விக்கு, இராணுவக்கல்வியும் பொதுமக்கள் கல்வியும் ஒன்றாகமுடியாது போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

# தொடரும் அதிபர், ஆசிரியர் போராட்டம்; திங்கள் இறுதி முடிவு என்கிறார் பிரதமர்

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் 18 ஆவது நாளாக இன்றும் (வியாழக்கிழமை) தொடர்கிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பேச்சு இணக்கப்பாடின்றி நிறைவு பெற்றது.

இதனையடுத்து, ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து இறுதி தீர்மானம் எட்டப்படும் என பிரதமர்மஹிந்தராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

அத்தோடு, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பணியாற்றுவதற்குத் தயாராகுமாறு அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கத்தினரிடம் பிரதமர் கூறியுள்ளார்.

இந்த நிலையிலேயே, இணையவழி கற்பித்தல் முறையில் இருந்து விலகி தாம் முன்னெடுத்து வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை வரை தொடர்வதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

# டயகமவைச் சேர்ந்த மேலும் 10 பெண்கள் ரிஷாத் வீட்டில் பணிக்கமர்த்தப்பட்டனர்

## பொலிஸ் அதிரடி விசாரணை

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் 2010ஆம் ஆண்டு முதல் மேலும் 10 பெண்கள் பணியாற்றியுள்ளனர் எனப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், குறித்த 10 பேரும் டயகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பாக ரிஷாத்தின் வீட்டில் பணியாற்றிய 5 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ரிஷாத்தின் வீட்டில் பணிபுரிந்த நிலையில் மரணித்த ஹிஷாலினியை ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்கு அழைத்துச் சென்ற தரகரால் முன்னதாக பல சந்தர்ப்பங்களில் பல சிறுமிகள் பணிக்கு அமர்த்தப்பட்டமை தொடர்பாகவும் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஹிஷாலினியின் மரணம் தொடர்பாக பொலிஸ் குழு நேற்று முன்தினம் முதல் டயகம பகுதியில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இதன்போது, ஹிஷாலினியின் பெற்றோர் உள்ளிட்டவர்களிடமும் குறித்த குழு வாக்குமூலம் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் இணையவழி அரங்க கதையாடல்

*புத்தாக்க அரங்க இயக்கத்தால் வாராந்தம் நடத்தப்படும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் - 04 நிகழ்வாக கொரோனா முடக்க கால தனிமையை போக்குதல் மற்றும் சிறார்களின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் புத்தாக்க அரங்க இயக்கத்தினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இணையவழி குறுநாடகப் பிரதியாக்கப் போட்டிக்கான நிலையறிவித்தல் நிகழ்வு எதிர்வரும் 01.08.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.*

*இந்த நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளர் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வரா, கதையாடல் நிகழ்வை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன், போட்டி நிலையறிவித்தலை ஆற்றுகை இணைப்பாளர் எஸ்.ரி.திஸ்ணுகன், நன்றியுரையை ஆற்றுகை இணைப்பாளர் எஸ்.ஆர் .சாது ஆகியோர் வழங்கவுள்ளனர்.*

*சூம் செயலி இலக்கம் 76319018137 கடவுச்சொல் ஐ.ரி.எம். ஊடாக நாடக போட்டியாளர்களையும் நாடக ஆர்வலர்களையும் இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அறிவித்துள்ளார்கள்.*

# அலாஸ்காவில் 8.2 ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ; சுனாமி எச்சரிக்கை



சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால் அலாஸ்கா தீவுகளில் கடும் சேதம் ஏற்பட்டு இருக்கும் என்று அஞ்சப்படுகிறது. அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம் கடற்கரையோர பகுதியாகும். இங்கு பல்வேறு தீவுகள் உள்ளன.

இந்த நிலையில் அலாஸ்காவில் உள்ள தீவில் இன்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 8.2 ஆக பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நிலநடுக்கம் கடலில் 35 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது.

நிலநடுக்கம் காரணமாக அங்குள்ள கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அமெரிக்காவின் சுனாமி எச்சரிக்கை மையம் விடுத்த எச்சரிக்கையில், அலாஸ்கா தீவில் 8.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து வடக்கு மரினா மற்றும் குகம் தீவுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து அதிகாரிகள் உடனே அங்குள்ள மக்களை கடற்கரைக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தி வருகிறார்கள். சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால் அலாஸ்கா தீவுகளில் கடும் சேதம் ஏற்பட்டு இருக்கும் என்று அஞ்சப்படுகிறது. ஆனால் சேத விவரங்கள் குறித்து உடனடியாக விவரம் தெரியவில்லை. இதற்கிடையே அலாஸ்காவில் நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.2 ஆக இருந்தது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையமும், ஐரோப்பிய நிலநடுக்க மையம் ரிக்டர் அளவில் 8 ஆக பதிவானதாகவும் தெரிவித்துள்ளது.



# தடுப்பூசி போடுகிறவருக்கு 100 டொலர்கள் பரிசு!

## நியுயோர்க் மேயர் அதிரடி அறிவிப்பு

நியுயோர்க்கில் தடுப்பூசி போட்டுக் கொள்பவர்களுக்கு 100 டொலர் பரிசு கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மீண்டும் டெல்டா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் சூழலில் பொதுமக்கள் அனைவரும் மீண்டும் முகக்கவசம் அணியும் படி அதிபர் ஜோ பைடன் வேண்டுகோள் விடுத்தார்.

தடுப்பூசிகள் இயக்கத்தை வேகப்படுத்தவும் ஜோ பைடன் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் ஒருபகுதியாக நியுயோர்க் நகரவாசிகளுக்குத் தடுப்பூசி போட்டால் 100 டொலர் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 66 சதவீதம் பேர் இரண்டு தடுப்பூசிகளும் 71 சதவீதம் பேர் ஒரு தடுப்பூசியும் போட்டுக் கொண்டிருக்கின்றனர் என நியுயோர்க் நகர மேயர் டெ பிளாசியோ தெரிவித்துள்ளார்

# காலநிலை மாற்றத்தினால் சோமாலியாவில் குடிநீர் பஞ்சம்!

## குறைந்த அளவு நீரை பகிர்ந்து அருந்தும் ஒட்டகங்கள்



காலநிலை மாற்றத்தினால் ஆபிரிக்க நாடான சோமாலியாவில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் வளர்ப்பு உயிரினங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது அந்நாட்டில் கால்நடை வளர்ப்பவர்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொண்டுள்ளனர்.

மழை எதுவும் பெய்யாததால் மனிதர்கள் மட்டுமன்றி வளர்ப்பு உயிரினங்களும் குடிக்க நீர் கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கிடைத்துள்ள குறைந்த அளவிலான குடிநீரை அதிகம் நீர் அருந்தும் ஒட்டகங்கள் பகிர்ந்து கொள்ளும் வீடியோ வெளியாகி உள்ளது.



# பிரான்ஸில் நடக்க முடியாத மகனுக்காக தந்தை உருவாக்கிய ரோபோ

பிரான்ஸில் நடக்க முடியாமல் சக்கர நாற்காலியில் முடங்கி இருந்த 16 வயது மகனை, ரோபோட்டிக் இன்ஜினியர் தந்தை, அவர் உருவாக்கிய ரோபோ உதவியுடன் எழுந்து நடக்க செய்துள்ளார்.

மகன் ஆஸ்கார் வைத்த அன்பு கோரிக்கைக்கு இணங்க, இந்த பிரத்யேக ரோபோவை வடிவமைத்துள்ளார் ஜீன் லூயிஸ் கான்ஸ்டான்ஸா . இன்னும் பத்தாண்டுகளில் உலகில் சக்கர நாற்காலிகளுக்கு தேவையே இருக்காது என்று நம்பிக்கை தெரிவித்துள்ள ஜீன் , எழுந்து நடக்க முடியாதவர்களுக்காக பாரிஸில் இது போன்ற ரோபோக்களை தயாரிக்கும் வாண்டெர்க்ராஃப்ட் என்னும் நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவராக உள்ளார்.

# இந்தியாவின் கொரோனாத் தடுப்பூசி இயக்கத்திற்கு அமெரிக்கா ஆதரவு



இந்தியாவின் கொரோனாத் தடுப்பூசி இயக்கத்திற்கு ஆதரவளிக்கும் விதத்தில், 175 கோடி ரூபா நிதி உதவி அளிக்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளின்கன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை, பிளின்கன் சந்தித்துப் பேசினார். பின்னர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுப் பேசிய அவர், இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசி விநியோகத்தை வலுப்படுத்தி உயிர்களை காப்பதற்கு, அமெரிக்கா 175 கோடி ரூபா நிதி வழங்கும் என அறிவித்தார்.

இந்தியா மற்றும் அமெரிக்காவில் பெருந்தொற்றை முடிவுக்கு கொண்டு வர உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். பெருந்தொற்றின் ஆரம்ப காலத்திற்கு அமெரிக்காவுக்கு இந்தியா அளித்த உதவிகளை மறக்க முடியாது என்றும் பிளின்கன் தெரிவித்தார்.



# மூன்றாவது அலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு தமிழக சுகாதாரத்துறையினர் தீவிர நடவடிக்கை

கொவிட் பெருந்தொற்றின் முதல் மற்றும் இரண்டாம் அலையின் தாக்கம் உச்சம் அடைவதற்கு முன், தொற்று பாதிப்புகள் முழுவதுமாக சரிந்தன. அதுபோலவே தற்போதும் தமிழகத்தின் சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் கொவிட் தாக்கம் குறைந்துள்ளது. இது மூன்றாம் அலைக்கான அறிகுறியாக இருக்கலாம் என, வல்லுநர்கள் சந்தேகிக்கின்றனர்.

கொவிட் பெருந்தொற்றின் முதல் அலையின்போது 2020 மே முதலாம் திகதி தொற்று எண்ணிக்கை 111 ஆக இருந்தது. அதன் பின் தொற்று எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து ஜூன் மாதத்தில் உச்சத்தைத் தொட்டது. அதுபோல் இரண்டாம் அலையின்போது 2021 பெப்ரவரி முதலாம் திகதி 119 ஆக இருந்த ஒரு நாளுக்கான தொற்றுப் பாதிப்பு, அதன்பின் உச்சத்தைத் தொட்டது. தற்போது தமிழகத்தில் தினசரி தொற்று 1,700 ஆக பதிவாகி வருகிறது. இது கடந்த ஆண்டு கொவிட் தொற்று உச்சமடைவதற்கு முன் நவம்பர் மாதத்தில் பதிவான தொற்று எண்ணிக்கையை ஒத்திருப்பது குறிப்படத்தக்கது. இதனால், இது மூன்றாம் அலையின் தொடக்கமாக இருக்கலாம் என, மருத்துவ வல்லுநர்கள் சந்தேகிக்கின்றனர். மூன்றாம் அலையைத் தவிர்க்க சென்னை உள்ளிட்ட நகரங்களில் தொடர்ச்சியாக கொவிட் பரிசோதனைகள் மேற்கொள்வது, அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவது போன்ற நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்துவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெகாசஸ் விவகாரம் தொடர்பாக விரிவான விளக்கம் தேவை கைப்பேசிகள் உளவு பார்க்கப்பட்டமை பற்றி ராகுல்காந்தி கருத்து



பெகாசஸ் உளவுச் செயலி விவகாரம் தொடர்பாக ஏன் நாடாளுமன்ற அவைகளில் விவாதிக்கக் கூடாது? என காங்கிரஸ் எம்.பி. ராகுல்காந்தி கேள்வியெழுப்பியுள்ளார்.

கைப்பேசி ஒட்டுக்கேட்பு தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என வலியுறுத்தி நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், நாடாளுமன்ற இரு அவைகளில் எந்தப் பணிகளும் நடக்காமல் ஒத்திவைக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் நாடாளுமன்றில், எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம், காங்கிரஸ் கட்சியின் மல்லிகார்ஜுனா கார்கே தலைமையில் நடந்தது. ராகுல்காந்தி, தி.மு.க. எம்.பியான திருச்சி சிவா உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ராகுல்காந்தி பேசும்போது, நாடாளுமன்றை இயங்க அனுமதிக்கவில்லை எனக்கூறி எதிர்க்கட்சிகளை பிரதமர் அவமதிக்கிறார். நாங்கள், குடிமக்கள், விவசாயிகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பு குறித்த விவகாரங்களைத்தான் எழுப்புகிறோம் என குறிப்பிட்டார்.

கூட்டம் முடிந்த பின்னர் ராகுல்காந்தி ஊடகங்களுக்கு தகவல் அளிக்கையில், பணவீக்கம், பெகாசஸ் மற்றும் விவசாயிகள் பிரச்சினைகளில் நாங்கள் சமரசம் செய்ய விரும்பவில்லை. இது குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டும்' என உறுதிபடக் கூறினார்.

இதன் பின்னர் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அனைவரும் நாடாளுமன்ற வளாகத்தில் கொட்டும் மழையில் நனைந்தவாறு செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது ராகுல்காந்தி, ஒட்டுக்கேட்பதற்காக பெகாசஸ் உளவுச் செயலியை இந்திய அரசு வாங்கியதா, இல்லையா? என்ற ஒரே ஒரு கேள்வியைத்தான் நாங்கள் கேட்கிறோம். அதற்கு மத்திய அரசு பதில் சொல்லியாக வேண்டும். பெகாசஸ் என்னும் ஆயுதத்தை சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக இந்திய மத்திய அரசு பயன்படுத்தியுள்ளதா? பெகாசஸ் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றில் எந்த விவாதமும் நடைபெறாது என மத்திய அரசு தெளிவாகக் கூறியுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி உங்கள் தொலைபேசியில் செயலாற்றக்கூடிய ஓர் ரகசிய ஆயுதத்தை புகுத்தியுள்ளார். இந்த ஆயுதம் எனக்கு எதிராக மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றம், பல தலைவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை ஏன் நாடாளுமன்றில் அவைகளில் விவாதிக்கக் கூடாது? நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகளின் குரல் நசுக்கப்படுகிறது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளை நாங்கள் இடையூறு செய்கிறோம் எனக் கூறுகின்றனர். நாங்கள் சபையைக் குழப்பம் செய்யவில்லை, எங்கள் கடமைகளை நிறைவேற்ற விரும்புகிறோம். இந்த ஆயுதம் பயங்கரவாதிகள் மற்றும் தேச விரோதிகளுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால், அது இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெகாசஸ் விவகாரத்தில் நடந்தது என்ன என்பது பற்றி விரிவான விளக்கம் தேவை' என்று கூறினார்.



# ஆறுமுகசாமி ஆணையத்தின் தடை நீக்கப்பட்டதும் முதல் ஆளாக ஆஜராவேன்; ஓ.பன்னீர்செல்வம்

ஜெயலலிதா மரணம் தொடர்பான ஆறுமுகசாமி ஆணையத்துக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்ட பின்னர் முதல் ஆளாக விசாரணைக்கு ஆஜராவேன் என, அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக 2017ஆம் ஆண்டு, ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள், போயஸ் கார்டன் பணியாளர்கள் என 154 பேரிடம் ஆணையம் விசாரித்தது. ஆனால், ஆணையம் அமைவதற்கு காரணமான ஓ.பன்னீர்செல்வத்துக்கு பலமுறை அழைப்பாணை அனுப்பியும் அவர் நேரில் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்தச்சூழலில், மருத்துவக் குழு அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என அப்போலோ மருத்துவமனை தொடர்ந்த வழக்கில் ஆறுமுகசாமி ஆணையத்துக்கு 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 26ஆம் திகதி உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இந்த நிலையில், கடந்த 27 மாதங்களாக விசாரணை நடைபெறாமல் இருக்கும் ஆறுமுகசாமி ஆணையத்தில், நீதிமன்றத்தின் தடை நீக்கப்பட்டதும் முதல் ஆளாக விசாரணைக்கு ஆஜராவேன் என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

# 2022 இறுதியில் சந்திரயான்-3 விண்ணில் ஏவப்படலாம் இந்திய மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தகவல்



2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் சந்திரயான்-3 விண்கலம் விண்ணில் ஏவப்படக்கூடும் என்று இந்திய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல் துறைகளின் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாக அவர் அளித்த பதிலில், சந்திரயான்-3 திட்டத்தை மெய்யாக்கும் பணி நடைபெற்று வருகிறது. சந்திரயான்-3 திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கட்டமைப்புப் பணியை இறுதி செய்தல், துணை அமைப்பு முறைகளின் நடைமுறையாக்கம், ஒருங்கிணைப்பு, விண்கல அளவில் விரிவான சோதனை மற்றும் பூமியின் மீது அமைப்புமுறை செயல்திறனை மதிப்பிடுவதற்கான சிறப்பு சோதனைகள் உள்ளிட்ட பல்வேறு செயல்முறைகள் அடங்கியுள்ளன.

இந்தத் திட்டத்திற்கான பணிகள் கொவிட்-19 பெருந்தொற்றால் பாதிப்படைந்தன. எனினும், வீடுகளிலிருந்து செய்யக் கூடிய அனைத்துப் பணிகளும் பொது முடக்கத்தின்போதும் மேற் கொள்ளப்பட்டன. தளர்வுகள் அறிவிக்கப்படத் தொடங்கியது முதல், சந்திரயான்-3 திட்டப் பணிகள் மீண்டும் தொடங்கியதுடன், முதிர்ச்சியான நிலையில் இந்தப் பணிகள் உள்ளன. இயல்பான பணிகள் இனி மேற்கொள்ளப்படும் என்ற அனுமானத்தில், 2022-ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் சந்திரயான்-3 விண்ணில் ஏவப்படக் கூடும் என்று அவர் தெரிவித்தார்.

# பிரதமரின் அனுமதி பெற்று மேகதாதுவில் அணை கட்டப்படும் கர்நாடகாவின் புதிய முதல்வர் பசவராஜ் பொம்மை உறுதி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அனுமதி பெற்று விரைவில் காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டப்படும் என்று கர்நாடகாவின் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள பசவராஜ் பொம்மை தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் புதிய முதலமைச்சராக பதவியேற்ற பின், தலைமைச் செயலகத்துக்குச் சென்ற அவரை, அதிகாரிகளும் அமைச்சர்களும் பூச்செண்டுகள் கொடுத்து வரவேற்று வாழ்த்தினர்.

இதன் பின்னர், தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த பசவராஜ் பொம்மை, மேகதாதுவில் அணை கட்டும் விவகாரத்தில் உறுதியாக இருக்கிறேனங என கூறினார். இந்தியப் பிரதமரை சந்தித்து உரிய அனுமதி பெற்று விரைவில் காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டப்படும் என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

# வெளிமாநில தமிழர்களிடையேயும் தமிழ்ப் பயன்பாட்டை பரவலாக்க வேண்டும்; தமிழக முதல்வர் ஸ்டாலின்

*தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துவகை முன்னெடுப்புகளையும் மேற்கொள்ள வேண்டும் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை ஆய்வுக் கூட்டத்தில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.*

*தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற முதலமைச்சர், வெளிநாடுகளிலும், வெளி மாநிலங்களிலும் வாழும் தமிழர்களிடையே தமிழ்ப் பயன்பாட்டை பரவலாக்கும் வகையில் புதிய முயற்சிகளை, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.*

*இக்கூட்டத்தில் தமிழகத்தின் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# பொருள்களின் விலை உயர்வுக்கு எதிராக திருகோணமலை மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

பொருள்களின் விலையேற்றம் மற்றும் எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினரால் திருகோணமலையில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலையில் உள்ள சண்டிபே பகுதியில் நடைபெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான மீனவர்கள் பங்கேற்றிருந்தனர்.

எரிபொருள் விலை, அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்லும் நிலையில், அரசு இவற்றை குறைக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இலங்கையின் சுற்றுச்சூழல் நாளுக்கு நாள் மாசுபடுவதுடன், குறிப்பாக திருகோணமலை கடற்பிராந்தியங்களில் அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத கட்டுமானப் பணிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கையில் தீப்பந்தங்களையும் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 79 கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனா தொற்றுறுதி

கல்முனை பிராந்தியத்தில் இதுவரை 79 கர்ப்பிணிப் பெண்கள் கொவிட் 19 நோயாளிகளாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

கூடுதலாக அக்கரைப்பற்றில் 15 பேரும், பொத்துவிலில் 13பேரும், சம்மாந்துறையில் 11பேரும், ஏனைய பிரதேசங்களில் 10இற்கும் குறைந்த கர்ப்பிணிகள் கொவிட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இதேவேளை கல்முனைப் பிராந்தியத்திற்கான இரண்டாம்கட்டத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்று வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென 1 லட்சத்து 50 ஆயிரம் சினோபோர்ம் தடுப்பூசிகள் வந்து சேர்ந்துள்ளன. அவற்றை இன்று முதல் 13 சுகாதாரப்பிரிவுகளிலும் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனி, ஞாயிறு இருதினங்களிலும் 50ஆயிரம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கர்ப்பிணிப் பெண்களுக்கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து தடுப்பூசிகளை ஏற்றி கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தபட்டுள்ளது

கல்முனைப்பிராந்தியத்திலுள்ள 13 சுகாதாரவைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலுள்ள 07 ஆதாரவைத்தியசாலைகளிலும் 13 பிரதேச வைத்தியசாலைகளிலும் சுகாதாரப்பிரிவினர் ஏற்படுத்தும் பாடசாலைகள் போன்ற விசேடமையங்களிலும் தடுப்பூசி செலுத்தப்படும்.

முன் ஏற்பாட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 30வயதுக்கு மேற்பட்டோர், கர்ப்பிணித்தாய்மார்கள், தொழிற்சாலை ஊழியர்கள், வைத்தியசாலை மற்றும் சுகாதார அலுவலகங்களில் பணியாற்றுவோர், வீட்டிலிருக்கும் நெருங்கிய உறவுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி செலுத்தப்படவிருக்கின்றன.

அதேவேளை பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. முதலாம்கட்டத்தில் தவறவிட்டவர்கள் இன்றுமுதல் அதனை ஏற்றிக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் காங்கிரஸ் எம்.பிக்கள் மூவரும் அரசுடன் உல்லாசம் – மனாப் சாடல்

இலங்கை முஸ்லிம்களுக்கு அதிலும் குறிப்பாக இலங்கை முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு கெட்ட காலமாகவே இந்த காலம் உள்ளது எனலாம். தன்னால் உருவாக்கப்பட்டவர்களும், தன்னுடன் நட்பு பாராட்டியவர்களும் தனக்கு எதிராகச் செயற்படும் காலம் வரும் என்றும் எதிரிகளை விட துரோகிகளே மனதை கடுமையாக பாதிப்படைய செய்வார்கள் என்பதை இப்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் அவர்கள் அறிந்து கவலையடைந்திருப்பார் என நம்புகிறேன் என்று கல்முனை தொகுதி முக்கியஸ்தரும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம்.அப்துல் மனாப் தெரிவித்தார்.

நேற்று கல்முனை காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர். – அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் தலைவருக்கு எதிராக நடைபெறும் அநீதிகளை பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் அமைதியாக இருக்கிறார்கள், என்பதையும் தாண்டி யார் யாரெல்லாம் தலைவருக்கு துன்பம் விளைவிக்கிறார்களோ அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டுக்கொண்டும் இருக்கிறார்கள்.

இவர்களினால் தலைவரின் இன்றைய நிலைக்கு எதிராக ஒரு உரையை கூட நிகழ்த்த முடியாமல், கண்டனத்தை கூட வெளியிட முடியாமல் இருப்பது கவலையளிக்கிறது. இப்படியான நிலை எங்களின் எதிரிகளுக்கும் வரக் கூடாது என இறைவனை பிராத்திக்கிறேன். எதிரிகளை விட துரோகிகள் கொடுமையானவர்கள் என்பதை அவர்கள் எங்களுக்கு இப்போது காட்டியுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.



# சீலாமுனை ஆற்றங்கரையில் கரையொதுங்கிய டொல்பின்

நேற்று மாலை 5.30 மணி அளவில் சீலாமுனை ஆற்றின் கரையோரமட்டக்களப்பு முகத்துவாரத்தை அண்டியுள்ள பகுதியில் சுமார் 4 அடி நீளமான டொல்பின் மீன் கரை ஒதுங்கியுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு கடற்கரைப் பகுதியில் இறந்த நிலையில் ஆமை மீன்கள் கரை ஒதுங்கி வரும் நிலையில் முகத்துவாரத்தில் உள்ள ஆற்றுப்பகுதியில் டொல்பின் மீன் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் வியாபாரி கைது

ஓட்டமாவடி எஸ்.எம்.ரீ.ஹாஜியார் வீதியில் வீட்டில் வைத்து 41வயதுடைய பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய புலனாய்வுப் பிரிவினரும் வாழைச்சேனை பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் நான்கு கிராம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இவருடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அனுராதபுர பிரதேசத்தைச் சேர்ந்த 41வயதுடைய சந்தேக நபர், ஓட்டமாவடியில் திருமணம் முடித்துள்ளார் என்றும், இவர் பிரபல போதைவஸ்து வியாபாரி என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தமிழ் ஊடகவியலாளர் வீட்டுத்திட்டத்திற்கான உள்ளக வீதிகள் செப்பனிடும் பணிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபைக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக, ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, மட்டக்களப்பு மயிலம்பாவெளி, சவுக்கடி ஆகிய பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கான வீட்டுத்திட்டத்திற்கு வீதிகள் செப்பனிடும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபை தவிசாளர் எஸ்.சர்வானந்தன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வீதி செப்பனிடும் ஆரம்ப நிகழ்வில், ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபையின் செயலாளர் வி.பற்குணன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.நித்தியானந்தன், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஷ்ணகுமார், தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.





# ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக்ஸ் இறுதிப்போட்டியிலிருந்து நடப்பு சம்பியன் சிமோன் பைல்ஸ் திடீர் விலகல்





2016 இல் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் 4 தங்கப்பதக்கங்களை வென்ற அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ், டோக்கியோஒலிம்பிக்இறுதிப்போட்டியில் இருந்து விலகியுள்ளார். ரியோ டி ஜெனிரோவில்நடைபெற்ற ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ் 4 பிரிவுகளில் தங்கப் பதக்கங்களை வென்றார். இதேபோல், அணி பிரிவிலும் அமெரிக்காவுக்குதங்கப்பதக்கத்தை வென்று கொடுத்தார்.

பன்னிரண்டு முறை உலக சம்பியன் பட்டத்தையும் வென்றுள்ள சிமோன் பைல்ஸ், உலகின் தலைசிறந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனையாக விளங்குகிறார்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் இவர் தங்கப்பதக்கத்தை வெல்வார் என்று கணிக்கப்பட்ட நிலையில், அணிப் பிரிவு இறுதிப்போட்டியில் இருந்து திடீரென அவர் விலகினார். இதனைத் தொடர்ந்து நேற்று நடைபெறவிருந்த சகலதுறை தனிநபர் பிரிவு இறுதிப்போட்டியிலிருந்தும் விலகுகிறேன் எனசிமோன்பைல்ஸ்அறிவித்துள்ளார்.

தனது மன ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு இறுதிப்போட்டியிலிருந்து விலகினேன் என அவர் விளக்கம் அளித்துள்ளார்.

மன நலன் மற்றும் உடல் நலனில் கவனம்செலுத்தவேண்டியிருப்பதாகவும் அவர்கூறியுள்ளார். சிமோன்பைல்ஸின் முடிவுக்கு சமூக வலைதளங்களில் ஆதரவளித்துள்ள அவரது ரசிகர்கள், அவர் விரைவில் மீண்டுவர வாழ்த்துகளையும் தெரிவித்து வருகின்றனர்.

# டோக்கியோவில் நேற்று 3,177 பேருக்குக் கொரோனாப் பாதிப்பு ஒலிம்பிக் உள்வட்டாரத்தில் மட்டும் 16 பேருக்கு தொற்று உறுதி




டோக்கியோவில் பல எதிர்ப்புகளுக்கும் அதிருப்திகளுக்கும் இடையே ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஒரேநாளில் டோக்கியோவில் மட்டும் 3,177 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டதில் போட்டி அமைப்பாளர்கள் பீதியடைந்துள்ளனர்.

அங்கு பெருந்தொற்று தொடங்கிய பிறகு ஒரே நாளில் கொரோனா எண்ணிக்கை 3,000 இனை தொட்டிருப்பது இப்போதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த புதனன்று 3,000 கொரோனா பாதிப்புகள் புதிதாக ஏற்பட்டதால் டோக்கியோவில் மருத்துவமனைகளிலும் நெருக்கடி அதிகரித்துள்ளது.

ஒலிம்பிக்கைப் பொறுத்தவரை உள்ளகக் கொரோனாப் பாதிப்பு 169 ஆக அதிகரித்துள்ளது. இதில் வீரர்கள், அதிகாரிகள், நிர்வாகிகளும் அடங்குவர். இன்னமும் கொரோனா எண்ணிக்கை அதிகரிக்கவே செய்யும் என்று நிபுணர்கள் எச்சரிக்கவே செய்கின்றனர். நேற்று மட்டும் டோக்கியோ ஒலிம்பிக் வட்டாரத்தில் 16 புதிய கொரோனா பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதனால் அனைவரும் கவலையும் அச்சமும் அடைந்துள்ளனர்.

ஜப்பானின் எதிர்க்கட்சித் தலைவர் ஜுன் அஜுமி கூறும்போது, கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவது குறித்து அரசு மிகையான தன்னம்பிக்கையுடன் செயல்படுகிறது. இது நிச்சயம் சூழ்நிலையை மோசமடையச் செய்யும் என்று எச்சரித்தார்.

ஒலிம்பிக் முடிந்தவுடன் ஜப்பானை கொரோனா எனும் புதிய தேசிய நெருக்கடி கடுமையாகத் தாக்கும் என்று பலரும் விமர்சித்து வருகின்றனர். கொரோனாத் தாக்கம் இருக்கும்போது ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதால் மக்களுக்கு கொரோனா அச்சமில்லாமல் போய், பொது வெளியில் தாராளமாக நடமாட அரசு வழி வகுத்துள்ளது என்று பலரும் விமர்சனம் செய்கின்றனர்.



# போல் வால்ட் உலக சம்பியன் ஒலிம்பிக்கிலிருந்து கொரோனா பாதிப்பால் விலகினார்

இரண்டு முறை உலக போல் வால்ட் சம்பியன் பட்டத்தை வென்றவரான அமெரிக்காவின் சாம் கென்ட்ரிக்ஸ் கொரோனாப் பாதிப்பு காரணமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்று அமெரிக்காவின் ஒலிம்பிக் மற்றும் பரா ஒலிம்பிக் குழு உறுதிப்படுத்தியது.

இது குறித்து அமெரிக்கா ஒலிம்பிக் குழு வெளியிட்ட அறிக்கையில், சாம் கென்ட்ரிக்ஸிற்கு கொரோனாப் பாதிப்பு உறுதியானது குறித்து நாங்கள் வருத்தப்படுகிறோம். டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இனி அவர் கலந்துகொள்ளமாட்டார். 2016 ரியோ ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்ற கென்ட்ரிக்ஸ் இப்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017 மற்றும் 2019 உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் கென்ட்ரிக்ஸ் தங்கப்பதக்கங்களை வென்றதுடன், டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் முக்கிய போட்டியாளர்களில் ஒருவராக கருதப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது ரி-20 போட்டியில் இந்தியாவை வென்றது இலங்கை

இந்திய அணிக்கெதிரான இரண்டாவது ரி-20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை இலங்கை அணி 1-1 என்ற கணக்கில் சமநிலைப்படுத்தியுள்ளது.

கொழும்பு – ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஷிகர் தவான் 40 ஓட்டங்களையும் தேவ்தத் படிக்கல் 29 ஓட்டங்களையும் எடுத்தனர். க்ருனல் பாண்ட்யாவுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதன் காரணமாக அவரோடு தொடர்பிலிருந்த இந்திய அணிவீரர்கள் எட்டுப்பேர் தனிமைப்படுத்தப்பட்டதால் சற்று பலம் குறைந்த இந்திய அணியை இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டை மீறிட முடியாமல் பந்து வீசியிருந்தனர்.



அகில தனஞ்சய 2 விக்கெட்டுகளையும் துஷ்மந்த சமீர, வனிந்து ஹசரங்க, தசுன் சானக ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இதனைத்தொடர்ந்து 133 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கையடைந்து வெற்றி பெற்றது. தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் மினோத் பானுக 36 ஓட்டங்களையும் சேர்த்தனர். இந்திய அணியின் குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் தனஞ்சய டி சில்வா தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் தொடரின் இறுதியுமான ரி-20 போட்டி இன்று நடைபெறுகிறது.

# 63 லட்சத்து 24 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சினோபோர்ம் முதலாவது டோஸைப் பெற்றனர்




நாட்டில் நேற்றைய தினம் 3 லட்சத்து 80 ஆயிரத்து 463 பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. அதன்படி, நேற்று மாத்திரம் 3 லட்சத்து 38 ஆயிரத்து 914 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டில் இதுவரை 63 லட்சத்து 24 ஆயிரத்து 298 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம், 13 ஆயிரத்து 465 பேருக்கு மொடர்னா தடுப்பூசியும் நேற்று செலுத்தப்பட்டது.

இதற்கமைய, இதுவரையில் 7 லட்சத்து 9 ஆயிரத்து 468 பேருக்கு மொடர்னா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் நேற்றைய தினம் 30 பேருக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டதையடுத்து, அந்த தடுப்பூசியை செலுத்திக்கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 105 ஆக அதிகரித்துள்ளது.

# நிதி திருத்த சட்டவரைவில் புதிய திருத்தங்கள் வருமாம்

## சட்டமா அதிபர் கூறுகின்றார்

அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் முன்வைத்த நிதி திருத்த சட்டவரைவில் புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுமீதான விசாரணை நேற்று (புதன்கிழமை) எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர் இதனை அறிவித்துள்ளார்.

குறித்த மனு பிரியந்த ஜயவர்தன, குமுதினி விக்ரமசிங்க மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான அரச தரப்பு சிரேஷ்ட சட்டவாதி நிர்மலன் விக்னேஸ்வரன் நீதிமன்றுக்கு இதனைத் தெரியப்படுத்தினார்.

குறித்த சட்டமூலத்தின் 7 சரத்துக்களில் திருத்தம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் நீதிமன்றத்திடம் அறிவித்தார்.



# மன்னார் வங்காலை பறவைகள் சரணாலய கோபுரம் அமைக்க அடிக்கல் நாட்டி வைப்பு

சர்வதேச பறவைகள் பாதுகாப்பாக தங்கிச் செல்லும் வங்காலை பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கான கோபுரம் நிர்மாணிக்கும் வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை வைபவ ரீதியாக அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பிரேமலால் எதிரிசிங்க தலைமையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் மற்றும் திணைக்களத்தின் அதிகாரிகள் யு.என்.டி.பி நிறுவன அதிகாரிகள், சர்வமத தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

மேற்படி கோபுரம் சுமார் 35 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 35 அடி உயரத்தில் இருந்து பறவைகளை அவதானிக்கும் வகையில் அமைக்கப்படவுள்ளது.

வங்காலை பறவைகள் சரணாலயம் சர்வதேச பறவைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் சட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

13 வகையான வெளிநாட்டுப் பறவைகள் சுமார் 5 லட்சம் வரை ரஷ்ய பகுதியில் இருந்து 14 நாடுகளை கடந்து வங்காலை சரணாலயத்திற்கு வருகை தருகின்றன. பருவ காலப்பகுதியில் பறவைகள் இங்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சுமார் 5 மணிநேர வாக்குமூலத்தின் பின் சி.ஐ.டியிலிருந்து வெளியேறினார் ஹரின்

சுமார் 5 மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றின்போது வெளியிட்ட கருத்து தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன்படி வாக்குமூலம் வழங்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று (புதன்கிழமை) காலை முன்னிலையாகி வாக்குமூலம் 5 மணிநேரம் வழங்கியபின் வெளியேறினார்.

# இலங்கை ஆஸ்திரேலிய கம்பன் கழகங்கள் இணைந்து நடத்தும் 'முந்துதமிழ்' இயலரங்கு

அகில இலங்கைக் கம்பன் கழகமும் ஆஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் 'முந்துதமிழ்' எனும் மாதாந்த இயலரங்கின் ஜூலை மாத நிகழ்வு எதிர்வரும் 31.07.2021 சனிக்கிழமை மாலை 3.30மணிக்கு (இலங்கைநேரம்) நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறும்.

இந்த நிகழ்வு, அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பொருளாளர் சோதிலிங்கம் சுதனின் மங்கல ஆரத்தியோடும், செல்வி வைசாலி யோகராஜனின் கடவுள் வாழ்த்தோடும் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக, கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் தலைமையில் அன்னைத் தமிழுக்கு அழியாச் சிறப்பைப் பெரிதும் தருவது திருவள்ளுவரின் அறத்தமிழே என்னும் தலைப்பில் பேராசிரியர் டி.எஸ்.பிரேமாவும் சேக்கிழாரின் பக்தித்தமிழே என்னும் தலைப்பில் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தனும் கம்பநாடனின் சூத்திரத்தமிழே என்னும் தலைப்பில் க.குமாரதாஸனும் பாரதியின் புரட்சித் தமிழே என்னும் தலைப்பில் வழக்கறிஞர் கே.சுமதியும் விவாத அரங்கில் பங்கேற்று வாதிடுவர்.

உலகெங்கிலும் நோயும் அச்சமும் நிறைந்திருக்கும் இன்றைய நிலையில் நம் தமிழன்னையின் உயர்வையும்நம் புலவர்களின் மகிமையையும் பெரியோர்கள் கூடி சிந்தித்து எம்மைப் பரவசப்படுத்த இருக்கிறார்கள்.

இந்த நிகழ்வை அனைவரும் கண்டுகளித்துப்பயன்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு மாதமும் நிறைவு சனிக்கிழமை மாலை 3.30 லுணிக்கு முந்துதமிழ் நிகழ்வு இடம்பெறும்.

Akila Ilngai Kamban
Kazhagam
Kamban Kazhagam
Australia

எனும் யூடியுப் முகவரிகளிலும்

Kambavarithy Ilankai
Jeyaraj
Kamban Kazhagam
Australia

எனும் பேஸ்புக் முகவரிகளிலும் பார்த்து மகிழலாம் இணையவழி நேரலையாக.

# ஒலிம்பிக் போட்டிகளைப் பார்வையிடுவதற்கு இராஜாங்க அமைச்சர்கள் ஜப்பான் விஜயம்!

## அது தொடர்பில் விசாரணை என்கிறது அரசு







ஒலிம்பிக் போட்டிகளை பார்வையிடுவதற்காக ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர்கள் தேனுக விதானகமகே, டி.வி. சானக மற்றும் ரொஷான் ரணசிங்க ஆகியோர் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பேசியபோதே அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

ஒலிம்பிக் போட்டியில் உத்தியோகபூர்வமாக பங்கேற்றவிளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் சென்ற மூவர் தொடர்பாகவும் தொடக்க விழாவில் இலங்கை தேசியக் கொடியைக் காட்டத் தவறியமை தொடர்பாகவும் விசாரணை ஆரம்பிக்கப்படும் எனக் கூறினார்.

அரச செலவினங்களை முடிந்தவரை குறைக்குமாறு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரியிருந்த நிலையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் இராஜாங்க அமைச்சர்களின் மகிழ்ச்சியான சுற்றுப் பயணம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

நிறுவனம் ஒன்றின் நிதியுதவி மூலமே அவர்கள் ஜப்பான் சென்றனர் எனவும் அரசாங்கம்அவர்களின்சுற்றுப்பயணத்துக்கு ஒரு ரூபாவைக் கூட செலவிடவில்லை என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இருப்பினும்உண்மையைவெளிப்படுத்த விசாரணை அவசியம் என்பதை தான் ஒப்புக்கொள்கிறேன் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.07.2021இல் வெளியிடப்பெற்றது.